கடப்பூரில் இரண்டாவது தமிழ்நாடு சர்வோதய சம்மேளனம் Regd. No. M 6207

86-வது சர்க்கா ஜயந்தி விசேஷ மலர்

# கிராமோதயம்


12 பக்கங்கள்

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - அக்டோபர் 1 * 1954 * விலை 1 அணா இதழ் 23

CONNEMARA PUBLIC LIBRARY 3-JAN 1956

13 OCT 1954 MADRAS



## 86-வது சர்க்கா ஜயந்தி

**ஏசு நாதரின் அன்பும் புத்தரின் அஹிம்சையும், லெனினின் புரட்சிக்கனலும், நெப்போலியனின் தந்திரமும் ஒருங்கே சேர்ந்து, நமக்கு வழிகாட்டி விடுதலையளித்து வாழவைத்த நம் தந்தை மகாத்மா காந்தியடிகளுக்கு, நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்!!**

## "சர்வோதய பக்ஷ நூல் காணிக்கை"

### சர்வோதய பக்ஷம்

அண்ணல் காந்திஜியை நாம் நமது நாட்டின் தந்தை என்று கருதுகிறோம். உலகில் நமது கௌரவம் அவர் பெயரால் பெருகிற்று. நாம் இன்று சுதந்திர மக்களாக விளங்குவதற்கும் அவர்தான் காரணம். ஏழாண்டுகளுக்கு முன் அவர் நம்மை விட்டு பிரிந்தார். ஜனவரி 30 தேதி அவர் காலமானார். பிப்ரவரி 12ந் தேதி அவருடைய அஸ்தி நாடெங்கும் புண்ய ஸ்தலங்களில் கரைக்கப்பட்டது. காந்திஜியின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் நாம் ஜனவரி 30 முதல் பிப்ரவரி 12 வரை சர்வோதய பட்சமாக கொண்டாடுகிறோம்.

### நூல் காணிக்கைகள்

பிப்ரவரி 12ந் தேதி காந்தியடிகளின் அஸ்தி [illegible]த்த புண்ய ஸ்தலங்களில் நடைபெறும் மேளா ஸதலங்களில், காந்தியடிகளின் நிர்மாண வேலைகளை துடர்ந்து செய்யும்பொருட்டு கையினால் நூற்ற ஒவ்வொரு சிட்டம் நூல் காணிக்கையாக செலுத்தும் வழக்கமும் ஏற்பட்டுவிட்டது. இம்மாதிரி நூல் காணிக்கை செலுத்தி நாம் காந்தியடிகள் பாலுள்ள நமது மரியாதையை வெளிப்படுத்துகிறோம்.

### காந்தியடிகளுக்கு நமது வோட்டு

இதுமட்டிலுமின்றி, இந்த நூல் காணிக்கையின் மூலம் நாம் சத்தியம், அஹிம்சை, சரீர உழைப்பின் பெருமை, சமத்துவம், சுரண்டலும் அதிகார ஆதிக்கமும் இல்லாத ஒருசமூக அமைப்பு உலக சமாதானம், அகில உலக சகோதரத்துவம், முதலியவைகளில் நமக்குள்ள நம்பிக்கையையும் காட்டுகிறோம். ஆகையால்தான் இதை வினோபாஜி அவர்கள் காந்தி மகானுக்கு நமது வோட் என்று கூறினார். ஒரு வாக்காளர் ஒரு வோட்டுதான் அளிக்க முடியும். ஆகையால் நூல் காணிக்கையாகவும் ஒரு நபர் ஒரு சிட்டம் நூல் கொடுத்தால் போதுமானது. நான்கு வயதுடைய சிறுவர்கள் கூட நூற்று தங்கள் காணிக்கையை செலுத்தி காந்தியடிகளுக்கு வோட்டளிக்கலாம் என்று வினோபாஜி கூறுகிறார். 35 கோடி மக்கள் தலா ஒரு சிட்டம் வீதம் காணிக்கை செலுத்தினால் ஒரு நூல் காணிக்கை மலையே தோன்றிவிடும்.

### 2 லட்சம் சிட்டம் நூல் காணிக்கை சங்கற்பம்

சரீர உழைப்பின் பெருமையை நிலைநாட்டும் பொருட்டு நாம் நூல் காணிக்கையை பரவச் செய்ய வேண்டும். தமிழ் நாட்டு சர்க்கா சங்க ஊழியர்களில் பொறுப்பு வாய்ந்த சுமார் 200 தொண்டர்கள் சேர்ந்து சென்ற 15–9–'54ல் தமிழ் நாட்டில் அடுத்த சர்வோதய மேளாவுக்குள் இரண்டு லட்சம் சிட்டம் நூல் காணிக்கையாக சேகரிப்பதென்று முடிவு செய்துள்ளார்கள். இது ஒரு பெரிய காரியமல்ல.

### பெரிய காரியமல்ல

ஜனங்கள் இன்று முதல் நூற்கத் தொடங்கலாம். நூற்கத் தெரியாதவர்கள் நூற்க கற்றுக் கொள்ளலாம். தினசரி ஒரு புது நபருக்காகிலும் நூற்பு கற்பிக்க வேண்டும் என்று எல்லா சர்வோதயவாதிகளும் சங்கற்பம் செய்து கொள்ளலாம். வருவாய் தரும் கதர் வேலை போன்றவைகள் இல்லாமல் எப்படி ஊழியர்களை வைத்து சர்வோதய வேலைகளை பரப்புவது என்ற சந்தேகமும், இந்த "நூல் காணிக்கை" நிதி எழுப்புவதாலேயே நிவர்த்தியாகிவிடும். எதிர்கால வேலைகள் யாவும் இந்த நூல் காணிக்கைகளின் மூலமாகவே நடைபெற வேண்டும் சர்வோதய ஊழியர்களுக்கு வருடந்தோறும் ரூ. 10 லட்சம் செலவாகுமாயின் 40 லட்சம் மக்களிடமிருந்து வருடந்தோறும் நூல் காணிக்கையாக 40லட்சம் சிட்டம் வசூலிப்பதற்குத்திட்டமிட்டு வேலை செய்யவேண்டும். இந்த வேலை காரணமாகவே நமக்கு பொதுஜன தொடர்பும், நமது வேலைகளுக்கு பலமும் கிடைத்துவிடும்.

### அக்டோபர் 2ந்தேதி முதல் காணிக்கை செலுத்தலாம்

காந்தியடிகளின் 86-வது பிறந்த நாள், அக்டோபர் இரண்டாம் தேதி முதல், தமிழ் நாடெங்கும், எல்லா அகில பாரத சர்வ சேவா சங்கக் கிளைகளிலும், பூமிதான யக்ஞ காரியாலயங்களிலும், நூல் காணிக்கைகள் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம். நூல் காணிக்கை செலுத்துபவர்கள் தங்கள் காணிக்கை நூல் சிட்டத்துடன் தங்கள் பூரா பெயர், விலாசம் எழுதி இணைத்து வைக்க வேண்டுமாய்க் கோரப்படுகிறார்கள்.

திருப்பூர்
23–9–'54 } — அ. பாலகிருஷ்ணன்

3-JAN 1956
MADRAS



# தென்னாற்காடு ஜில்லாவில் ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் சுற்றுப்பிரயாணம்

## ஏ. 123–31 பூமிதான வசூல்

**திண்டிவனத்தில் பூமிதான யாத்திரை ஆரம்பம் — : : சிதம்பரத்தில் முடிவு!**

அகில பாரத சர்வோதய சமாஜ காரியதரிசி ஸ்ரீ சங்கர்ராவ்தேவ் அவர்களின் தமிழ்நாடு பூதான சுற்றுப்பிரயாணம் 18—9—'54-ல் காலையிலிருந்து ஆரம்பமாயிற்று. அன்று காலை 8 மணிக்கு திண்டிவனம் தேசிய பாடசாலையில் ஒரு பூதான பொதுக்கூட்டம் நடந்தது. மதியம் 11 மணிக்கு கடலூரில் பாடலி தியேட்டரில் பொதுக்கூட்டத்தில் ஸ்ரீ தேவ் அவர்கள் பேசினர். சிதம்பரத்தில் அன்று மாலை ஆறுமுகநாவலர் உயர் நிலைப்பள்ளியில் ஊழியர் கூட்டத்தில் பேசிவிட்டு ஸ்ரீ தேவ் அவர்கள் தென்னாற்காடு ஜில்லா சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு அன்றிரவே தஞ்சை ஜில்லாவிற்குப் பயணமானார்.

ஸ்ரீ தேவ் அவர்களுடன் தமிழ்நாடு பூதானக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ஜெகந்நாதன், தென்னாற்காடு ஜில்லா பூதானக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ எம். ராமகிருஷ்ண ரெட்டியார், பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் ஸ்ரீ எஸ். ஆர் சுப்ரமண்யம், தென்னாற்காடு ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உபதலைவர் ஸ்ரீ அண்ணாமலை உடையார் ஆகியவர்களும் தென்னாற்காடு சுற்றுப்பிரயாணத்தில் கலந்துகொண்டனர்.

**தார்மீகப் புரட்சி**

பூதான இயக்கத்தில் தார்மீகப் புரட்சி தத்துவங்களை விளக்கிக் கூறுகையில் ஸ்ரீ தேவ் அவர்கள் அரசியல் சுதந்திரமடைந்த இந்தியா பொருளாதார சுதந்திரம் அடையாமல் இருப்பது தகாதென்றும், மாறிவரும் காலத்தையனுசரித்து, இருப்பவர்கள் இல்லாதவர்களைச் சகோதரர்களாகக்கருதி நிலத்தையும் சம்பத்தையும் பிரித்து சாந்தமான வாழ்வு வாழ வழிசெய்துகொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

**பாரத நாட்டின் பெருமைக்கேற்றது பூதான யக்ஞம்**

"உலகிலேயே இன்று இந்தியாவுக்குக் கௌரவம் கிடைத்திருக்கிறது. யுத்தங்களால் தவித்துவிட்ட உலக நாடுகள் இந்தியாவையே அமைதியின் காவலனாக நினைக்கின்றன. மற்ற நாடுகள் அமைதி, அமைதி என்று சொல்லியும் சொன்னபடி செய்வதில்லை. ஆனால் இந்தியாவைப் பொறுத்தமட்டில் உள்ளப்பூர்வமாக அமைதியை விரும்பி செயலில் காட்டி வருகிறது. அதனால்தான் இந்தியாவிற்குப் பெருமை ஏற்பட்டிருக்கிறது. கொரியாவில் நடந்த யுத்தம், இந்தோசீனாவில் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து நடந்த யுத்தம் இவற்றை நிறுத்துவதற்கு இந்தியா செய்த சேவை மகத்தானது. ஜெனிவாவில் மாநாடு கூடியது. அதில் பெரிய வல்லரசுகள் கலந்துகொண்டன. ரஷ்யா, அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன், இவற்றின் பிரதிநிதிகள் கூடிப்பேசினர். அந்த மகாநாட்டிற்கு இந்தியாவின் பிரதிநிதி அழைக்கப்படவில்லை.

**மகத்தான சமாதான சேவை**

ஆனால் இந்தோசீனாவில் யுத்தநிறுத்தம் செய்ய கமிஷன் ஏற்படுத்தும் கட்டம் வந்தபோது அதில் இந்தியாவுக்குத் தலைமைப் பதவி கிடைத்தது. அமைதி பற்றிய இடத்தில் இந்தியாவுக்கே முதலிடம். அமெரிக்காவுக்குக் கிடைக்காத பெருமை, ரஷ்யாவிற்குக் கிடைக்காத பெருமை, மற்ற வல்லரசுகளுக்கெல்லாம் வராத கௌரவம் இந்தியாவுக்குக் கிடைத்தது. இந்தியாவிடம் அப்படி ஏதாவது அணுகுண்டு, ஜலவாயுகுண்டு இருக்கிறதா? அமெரிக்காபோல ஒரு கோடீஸ்வர நாடா? பிரான்ஸ், இங்கிலாந்துபோல ஜனநாயக ஆட்சியைப் பல ஆண்டுகள் அனுபவித்த நாடா? இல்லை. அந்த நாடுகளெல்லாம் பல ஆண்டுகளாக முதிர்ந்த அனுபவமுள்ள நாடுகளாயிருந்தாலும் இந்தியா சுதந்திரமடைந்து ஏழு ஆண்டுகளே நிரம்பிய ஒரு குழந்தை. குழந்தையின் வாயின்மூலம்தான் தெய்வீகவாக்கு வெளிப்படும் என்பது ஏசுவின் வாக்கு. அதுபோல இந்தியா உண்மையாகவே அமைதியை விரும்பி அன்புமார்க்கத்தைக் கடைப்பிடித்து வருவதால் இந்தியாவிற்குப் பெருமை ஏற்பட்டிருக்கிறது. சீனப் பிரதமரும் நம் இந்தியப் பிரதமரும் டில்லியில் சந்தித்தனர். இரு நாட்டினரும் அன்புடனும் சௌஜன்யமாகவும் வாழ அமைதியான முறையில் ஒத்து வாழ்தல் என்ற உடன்படிக்கை செய்துகொண்டனர். இரு நாடுகளும் அமைதியான முறையில் ஒத்துவாழ விரும்பும்போது நம் உள்நாட்டில் அப்படிப்பட்ட வாழ்வு வேண்டாமா?

**அமைதியில்தான் அன்பு தோன்றும்**

அன்பு இருந்தால்தான் அமைதி இருக்கும். பணமும் ஏழ்மையும், அறிவும் மடமையும், ஒளியும் இருளும் ஏககாலத்தில் அமைதியாக இருக்க முடியாது. இந்த ஏற்றத்தாழ்வைப் போக்கினால்தான் உள்நாட்டில் அமைதி நிலவும். வெளிநாட்டு விவகாரங்களை அன்பு வழியில் தீர்த்துக்கொள்வது போல் உள்நாட்டில் இருக்கும் பொருளாதார சீர்கேட்டையும் அன்பு அமைதி இந்த நல்ல வழிகளில் செம்மை செய்துகொள்ள வேண்டும். இதைத்தான் பூதான இயக்கம் வலியுறுத்துகிறது."

### தென்னாற்காடு ஜில்லாவில் கிடைத்த பூமிதான விபரம்.

| | | ஏ. செ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ வெங்கிடகிருஷ்ண ரெட்டியார், தென்னாற்காடு ஜில்லா காங்கிரஸ் தலைவர் | 5–00 ந. |
| | " | 15–00 பு. |
| 2 | ,, ராஜாராம் ரெட்டியார், திண்டிவனம் | 17–00 பு. |
| 3 | ,, எம். ராமகிருஷ்ண ரெட்டியார், ஆத்திபாக்கம் | 1–00 ந. |
| | " " | 2–00 பு. |
| 4 | ,, டி. எஸ். ஸ்ரீனிவாச கச்சிராயர், நடுத்திட்டு | 2–00 பு. |
| 5 | ,, விஜயராகவ படையாச்சி, பூண்டியாக்குப்பம் | 20–00 பு. |
| 6 | ,, கட்டளைவெங்கிடபதி ரெட்டியார், திண்டிவனம் | 5–00 ந. |
| 7 | ,, அண்ணாமலை உடையார், சிறுமதுரை | 2–00 ந. |
| 8 | ,, கிருஷ்ணசாமி நாயுடு, சந்தைப்பேட்டை | 1–00 ந. |
| 9 | ,, வீராசாமி உடையார், மாரங்கியூர் | 0–48 ந. |
| 10 | ,, எஸ். ராமாநுஜ நாயுடு, மணக்குப்பம் | 0–43 ந. |
| 11 | ,, எம். கே. சுப்பராயலு நாயுடு, " | 0–27 ந. |
| 12 | ,, என். சாரங்கபாணி நாயுடு, " | 0–30 ந. |
| 13 | ,, விட்டல் ஸ்ரீனிவாச ராவ், சிறுகிராமம் | 0–50 ந. |
| 14 | ,, டி. கே. நாராயணசாமி நாயுடு, கடலூர் | 6–14 ½ பு. |
| 15 | ,, வி. எல். ராமகிருஷ்ண ரெட்டியார், கோழிப்பாக்கம் | 2–00 பு. |
| 16 | ,, ஜெகதீச ரெட்டியார், கொண்டாரெட்டிபாளையம் | 2–00 பு. |
| 17 | ,, ஏ. பாலகிருஷ்ணன், சிதம்பரம் | 1–00 ந. |
| | " " | 10–00 பு. |
| 18 | ,, ஏ. எல். அருணாசலம் பிள்ளை, ,, எல். முத்தையா பிள்ளை } நெய்வயல் | 1–30 ந. |
| 19 | ,, சி. சுந்தரேசம் பிள்ளை, " | 0–81 ந. |

3-JAN 1956

| | | | |
|---|---|---|---|
| 20 | ஸ்ரீ என். பி. சாமிநாத பிள்ளை, கீழ்நெடும்பூர் | 1-00 | ந. |
| 21 | ,, ஜி. கேசவ பிள்ளை, மேலவன்னியூர் | 1-00 | பு. |
| 22 | ,, எல். எஸ். சுப்பராய பிள்ளை, சிதம்பரம் | 1-00 | ந. |
| 23 | ,, ஆர். சம்பந்தம் பிள்ளை, ,, | 1-00 | ந. |
| 24 | ,, கே. எஸ். கோவிந்தசாமி, ,, | 1-00 | பு. |
| 25 | ,, ஏ. சதாசிவம், ,, | 1-00 | பு. |

**வேறு ஜில்லாக்களிலிருந்து சர்வ சேவா சங்கக் கிளைகள் மூலம் கிடைத்தவை**

| | | | |
|---|---|---|---|
| 26 | ,, வை. சாம்பசிவம், திருச்சி | 5-00 | ந. |
| 27 | ,, என். எல். ராஜு, ஆத்தூர் | 0-33 | ந. |
| 28 | ,, கே. ராமனுதன், கரூர் | 3-45 | ந. |
| 29 | ,, கே. சங்கர நாராயணன், கோவில்பட்டி | 1-00 | பு. |
| 30 | ,, வி. கோபால்சாமி, திருக்கோவிலூர் | 1-33 | பு. |
| 31 | ,, ஏ. எஸ். ராமசாமி ஐயர், திருச்சி | 2-00 | ந. |
| 32 | ,, ஏ. பழனிவேல், செந்துரை | 0-43 | ந. |
| 33 | ,, வி. வெங்கட்ராமன், கும்பகோணம் | 0-75 | ந. |
| 34 | ,, முத்துப்பழனி கவுண்டர், சாத்தாங்கண்ணி | 2-00 | பு. |
| 35 | ,, கெட்டிமுத்துக் கவுண்டர், ,, | 2-00 | பு. |
| 36 | ,, ஏ. ராமசாமி கவுண்டர், ,, | 1-00 | பு. |
| 37 | ,, நல்லதம்பிக் கவுண்டர், ,, | 1-00 | பு. |
| 38 | ,, வி. ராமசாமி கவுண்டர், ,, | 1-00 | பு. |
| 39 | ,, முத்துசாமி கவுண்டர், ,, | 1-00 | பு. |
| 40 | ,, எல். அழகர்சாமி, சிப்பிப்பாறை | 0-86 | பு. |
| 41 | ,, பா. ராமகிருஷ்ணன், ,, | 0-34 | பு. |
| 42 | ஸ்ரீமதி கணபதியம்மாள், கஸ்தூரிரங்கபுரம் | 0-09 | பு. |
| | மொத்தம் ... | 123-81½ | |

திருமங்கலம், 22—9—54

ச. ஜெகந்நாதன்,
கன்வீனர், தமிழ்நாடு பூதானக் கமிட்டி.

★

# தஞ்சை ஜில்லாவில் சங்கர்ராவ் தேவ் அவர்களின் பூமிதான யாத்திரை.

**நல்ல நன்செய் நிலங்கள் தானம் கொடுக்கப்படுகின்றன — இரண்டு நாட்களில் 118-75 ஏ. பூதானம் வசூல்**

**யாத்திரை ஆரம்பம்**

தென்னுற்காடு ஜில்லாவில் பூதான யாத்திரையை முடித்துவிட்டு ஸ்ரீ தேவ் அவர்கள் தஞ்சை ஜில்லாவில் 19—9—'54-ல காலையில் தனது சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்தார். ஸ்ரீ சர்தார் வேதரத்னம் அவர்கள், ஸ்ரீ ச. ஜெகந்நாதன், தஞ்சை ஜில்லா பூதானக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ டி. கே. சீனிவாசன் ஆகியவர்கள் ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்களுடன் ஜில்லா யாத்திரையில் கலந்துகொண்டனர்.

**உக்கடையில் நிலவிநியோக விழா**

19—9—'54-ல வலங்கமான், தார்த்தாங்குடி முதலிய கிராமங்களுக்குச் சென்றுவிட்டு மதியம் உக்கடை சேர்ந்தார். அன்று மாலை உக்கடையில் நடந்த நிலவிநியோக விழாவில் ஸ்ரீ தேவ் அவர்கள் கலந்துகொண்டார்கள். உக்கடையைச் சேர்ந்த ஸ்ரீ அப்பாவுத் தேவர் தானமாகக் கொடுத்திருந்த 60 ஏக்கரை சென்னை முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்கள் 60 ஏழை நிலமற்ற விவசாயிகளுக்கு பிரித்துக் கொடுத்து அதற்கான சாசனங்களை வழங்கினார். நிலவிநியோக விழாவில் ஜில்லாவின் முக்கிய நிலச்சுவான்தார்கள், தேசபக்தர்கள், உத்தியோகஸ்தர்கள், பக்கத்து கிராமவாசிகள் அனைவரும் கலந்து கொண்டனர். சாசனங்களை உக்கடையை சுற்றியுள்ள சுமார் 8 கிராமங்களிலுள்ள 60 விவசாயிகளுக்கு தலைக்கு ஒரு ஏக்கர் வீதம் பிரித்துக்கொடுத்துவிட்டு ஸ்ரீ காமராஜ் அவர்கள் பேசும்போது, நில சம்பந்தமான சட்டம் வருவது நிச்சயம்; அதற்கு முன்பே நிலச்சுவான்தார்கள் தாராளமாக நிலமளித்து நாட்டில் துவேஷத்தை ஒழிக்கவேண்டும் என்றும் ஸ்ரீ உக்கடைத்தேவர் அவர்களைப் பின்பற்றி எல்லா நிலச்சுவான்தார்களும் தாராளமாக நிலமளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். நிலம் பெற்ற விவசாயிகளுக்கு ஆசி கூறி ஸ்ரீ தேவ் அவர்கள் பேசும்போது, ஸ்ரீ அப்பாவுத் தேவர் இன்னும் அவரிடம் வேலை பார்க்கும் கூலிகள் எல்லோரையும் நிலத்துக்குச் சொந்தக்காரராக்குவதாக சங்கற்பம் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பின்பு ஸ்ரீ சர்தார் வேதரத்னம் அவர்கள் நிலதானமளிக்கக் கிடைத்திருக்கும் ஒப்பற்ற சந்தர்ப்பத்தை நிலம்படைத்தவர்கள் நழுவவிடக்கூடாதென்றும் உக்கடையில் நடந்ததைப்போல எல்லா கிராமங்களிலும் நில விநியோக விழாக்கள் நடக்க வேண்டும் என்றும் கூறினார்.

**நிலச்சுவான்தார்கள் கூட்டம்**

அன்று இரவு கும்பகோணம் கோபால்ராவ் வாசகசாலையில் நிலச்சுவான்தார்கள் கூட்டத்தில் பேசிவிட்டு ஸ்ரீ தேவ் கும்பகோணம் பொதுக்கூட்டத்திலும் பேசினார். ஸ்ரீல ஸ்ரீ குன்றக்குடி அடிகளார் அவர்களும் பாரதியைப் பற்றி பேசிய பிறகு பூதானத்தின் மகிமையைப் பற்றியும் விரிவாகக் கூறினார்.

20—9—'54-ல குத்தாலம், வைத்தீஸ்வரன் கோவில், திருவெங்காடு, சீர்காழி, மாயவரம் முதலிய இடங்களுக்கு ஸ்ரீ தேவ் விஜயம் செய்து கூட்டங்களில் பேசினார்.

**"சட்டம் வரும்முன்பு மனம் பக்குவமடைய வேண்டும்"**

"அன்பால் பூமிதானம் கொடுங்கள் என்று கேட்கும் எங்களிடம் சட்டம் செய்யலாமே என்று சிலர் சொல்லுகிறார்கள். அவ்வாறு சட்டம் செய்து காரியத்தைச் சுலபமாகச் செய்துவிடலாமென்றிருந்தால் நாங்களெல்லோரும் சட்டசபை அங்கத்தினராக வந்திருப்போம். இன்று சட்டம் செய்ய யாரை அனுப்புகிறோமோ அவர்களில் பலர் பெரு நிலம் படைத்தவர்களாக இருக்கின்றனரே. தங்கள் நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிட அவர்களே சட்டம் இயற்றுவார்களா? அவர்களது உள்ளமும் பக்குவப்படவேண்டும் என்பதற்காகத்தான் பூதான இயக்கம் நடக்கிறது. உயர்ந்தபட்ச நிலவுடைமை பற்றிய பேச்சு நடக்க ஆரம்பித்தவுடனே நிலச்சுவான்தார்கள் பலர் தங்கள் பந்துக்கள், சகோதரர்கள், வயிற்றிலிருக்கும் குழந்தைக்கும் கூட எழுதிவைத்துக் கணக்காகப் பிரிக்க ஆரம்பித்துவிட்டனர். ஆகையால் சட்டம் வரும் முன்னுல் மனம் பக்குவமடைய வேண்டும். உண்மையான ஜனநாயக ஆட்சி சட்டத்தால் ஆளப்படும் ஆட்சியாகாது. தீண்டாமை பற்றிய சட்டம் செய்து அதுவும் சரியாக வெற்றியடையாததால் இன்னும் ஒரு சட்டம், அதை மீறுகிறவர்களுக்கு ஆறு மாத கடுங்காவல் என்று வருகிறது. சட்டத்தில் ஏதோ புரட்சி நடக்கிறதே தவிர மனிதனுடைய மனது அப்படியே இருக்கிறது. அதனுல்தான் மனிதனுடைய மனதைப் பக்குவப்படுத்தி அன்பைக் காணிக்கையாகக் கேட்கிறது பூதான இயக்கம்." என்று ஸ்ரீ தேவ் அவர்கள் பூதானத்தைப் பற்றிப் பேசும்போது வலியுறுத்தினார்.

## ஸ்ரீ தேவின் இரண்டு நாள் சுற்றுப்பிரயாணத்தில் கிடைத்த நில தான விபரம்

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீ யாகப்ப நாடார் | 68 00 |
| 2) | „ வேணுகோபாலசாமி ஐயர், நார்த்தாங்குடி | 1 00 |
| 3) | „ குப்புசாமி உடையார், „ | 1 00 |
| 4) | „ டி. பி. ஐயாத்துரை உடையார், „ | 1 00 |
| 5) | „ டி. பி. சிங்காரவேலு உடையார், நரிக்குடி | 6 67 |
| 6) | „ சிவசங்கர உடையார், „ | 2 00 |
| 7) | „ பாலகிருஷ்ண உடையார், பூனையிருப்பு | 2 00 |
| 8) | „ சந்தானம், நீடாமங்கலம் | 0 33 |
| 9) | „ ஏ. எஸ். பி. ரத்னசபாபதி உடையார், „ | 3 38 |
| 10) | „ தங்கசாமி ரெட்டியார், குத்தாலம் | 2 00 |
| 11) | „ ஸ்ரீனிவாச ரெட்டியார், வைத்தீஸ்வரன்கோவில் | 0 37 |
| 12) | „ சொக்குப்பிள்ளை, „ | 1 00 |
| 13) | „ மகாதேவம் பிள்ளை, பெருந்தோட்டம் | 0 14 |
| 14) | „ சம்பந்தம் பிள்ளை, „ | 0 42 |
| 15) | „ டி. எம். ஸ்ரீனிவாசம் பிள்ளை, „ | 3 75 |
| 16) | „ ராஜையா பிள்ளை முதலானவர்கள் „ | 5 69 |
| 17) | „ ராமலிங்கம் பிள்ளை, மேலையூர் | 10 00 |
| 18) | „ கணபதிசுப்ரமணிய ஐயர், காளியாகுடி | 10 00 |
| | | 118 75 |

நடையனேறி,
22—9—'54

ச. ஜெகந்நாதன்,
கன்வீனர், தமிழ்நாடு பூதானக் கமிட்டி

★

## பூமிதான யாத்திரை

*19—9—'54*-ந் தேதி சங்கப்பாளையம் சென்று பூமிதான கூட்டம் போடப்பட்டது. அக் கூட்டத்திற்கு முத்துசாமிக் கவுண்டர் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின் கிளை தொண்டர்களால் பூமிதானம் என்னும் சிறு நாடகத்தை சம்பாஷணை மூலம் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது. சுமார் 300 ஜனங்கள் வரை கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு வந்திருந்த சிலர் பூமிதானம் கொடுப்பதாக வாக்களித்து இருக்கிறார்கள். கிளை நிர்வாகி முடிவுரைக்குப்பின்னர் தேசிய கீதத்துடன் கூட்டம் முடிக்கப்பட்டது.

— வி. ஆர். சுப்ரமண்யம்

## பெரியகுளம் தாலுக்காவில் சங்கர்ராவ் தேவ்ஜி திட்டம்

பெரியகுளம் நகர பூதானக் கமிட்டிக் கூட்டம் 13—9—'54-உ எஸ். வி. எம். டிரான்ஸ் போர்ட்டு மோட்டார் ஷெட்டில் தேசபக்தர் ஸ்ரீ கே. எம். காரணமூர்த்தித் தேவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

ஸ்ரீமான் கே. நாகமுத்துகாமாக்ஷி செட்டியார்
„ பி. எஸ். பழனியப்பன்,
„ வி. கே. பி. வேலுசாமி,
„ எம். வடிவெலு பிள்ளை,
„ பி. எஸ். சுப்பராயபந்துலு அய்யர்,
„ கே. சுந்தராஜன்.

ஜனாப் எஸ். வி. எம். சாஹீத் சாகீப் அவர்கள் தீர்மானம்:—

*22—9—'54*-உ ஸ்ரீஜத் சங்கர்ராவ் தேவ் அவர்கள் வருகையை முன்னிட்டு காந்தி மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் நிலதானம் பெறுவாரியாக வசூலிப்பதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. அக் கமிட்டியினரை சந்தித்து பூதான பத்திரிக்கையான கிராமோதயம் சர்வோதயம் பத்திரிகைகளுக்கு சந்தா சேர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

— ரெ. நடனகோபால்

## சிறந்த கதர் ஊழியரின் நிறைந்த தானம்

[கீழே தமிழ் நாட்டில் சீரிய முறையில் கிராம சேவை செய்துவரும் திரு சு. வைரவலிங்கம் அவர்களின் உணர்ச்சிமிகுந்த கடிதத்தை சக ஊழியர்கள் கவனத்திற்காக பிரசுரித்துள்ளோம்] — ஆசிரியர்

**ஆசிரியர் அவர்கள்,**

**"கிராமோதயம்"**

எனக்கு சொந்தமாக இன்று அனுபவத்தில் நிலமோ வேறு சொத்துக்களோ கிடையாது.

சர்வ சேவா சங்கத்தில் எனக்கு சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் நிதியிலிருந்தும் இனி எனக்கு கிடைக்கும் சம்பளத்திலிருந்தும் (6-ல்) ஆறில் ஒரு பங்கு தானம் கொடுக்க முடிவு செய்திருக்கிறேன்.

*1954*-ஆு செப்டம்பர்-மீ முடிய எனது ரொக்க ஜாமீன், க்ஷேம நிதியில் (சங்கத்தின் பங்கும் உள்பட) எனது கணக்கில் எவ்வளவு சேர்ந்திருக்கிறதோ அதில் 6-ல் ஒரு பங்கை என் கணக்கில் பற்றெழுதிவிட்டு சம்பத்துதானக் கணக்கில் வரவு வைத்துவிட வேண்டுகிறேன்.

*1954*-ஆு அக்டோபர்-மீ முதல் சம்பளப் பட்டியலிலேயே 6-ல் ஒரு பங்கை பிடித்து சம்பத்துதானக் கணக்கில் வரவு வைத்துவர வேண்டுகிறேன்.

மேல்கண்டபடி என் கணக்கில் எவ்வளவு பற்றெழுதப்பட்டிருக்கிறது என்ற விபரமும் எனக்கு தெரிவிக்க வேண்டுகிறேன்.

காந்திநகர்,
21—9—'54.

தங்கள்,
சு. வைரவலிங்.....

## திண்டுக்கல் தாலுக்காவில் சங்கர்ராவ் தேவ்ஜி யாத்திரை

இன்று காலை 5-20 மணிக்கு இங்கு வந்த ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்கள் கோஷ்டியாருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. 20 மைல் தூரத்தில் உள்ள காசிபாளையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு விஜயம் செய்தார். அங்கு ஸ்ரீ தேவ் அவர்கள் பூமிதானம் கதர் தத்துவம் பற்றி மிக விரிவாகப் பேசினார். காந்தி கிராம நிர்வாகி ஸ்ரீ ராமசந்திரம், ஸ்ரீ எஸ். ஜெகந்நாதன், ஸ்ரீ பட்டாபி ராமய்ய முதலியோர்கள் பேசினார்கள். பொதுக்கூட்டத்திற்கு திண்டுக்கல் முனிசிபல் சேர்மன் ஸ்ரீ கெ. கணேசன் பி. ஏ., பி. எல்., தலைமை வகித்தார். திண்டுக்கல் தாலுக்காவில் ஆத்தூர் பிர்க்கா நீங்கலாக வசூலித்த 80 ஏக்கர் நிலத்தை ஸ்ரீ தேவ் அவர்கள் வசம் சமர்ப்பிக்கப்பட்டது. காசிபாளையத்தில் வரவேற்பும் பொதுக்கூட்டமும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதுவரை இந்த தாலுக்காவில் 1,000 ஏக்கர் வரை தானமாக வாங்கப்பட்டுள்ளது. தாலுக்காவின் கோட்டா 2,000 ஏக்கர். இன்னும் சுமார் 50 ஏக்கர் வரை நிலதானம் வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

— அ. கருப்புசாமி

**டல்லடம் வடுகபாளையம்**

17—9—'54ல் இரவு 9 மணியிலிருந்து 11 மணி வரை பூதானப் பாடல்களுடன் வடுகபாளையம் தெருக்கள் வழியாக கதர் ஊழியர்களும் பல்லடம் தாலூக்கா பூதான யாத்திரை கோஷ்டியினரும் ஊர்வலம் நடத்தி ஓர் பொதுக்கூட்டம் நடத்தினார்கள். அதுசமயம் கீழ்க்கண்ட பூதானமும் சம்பத்து தானமும் கிடைத்தது.

| | | ஏ | செ. |
|---|---|---|---|
| ரங்கநாதன், வடுகபாளையம் | புஞ்சை | 0 | 15 |
| ஆர். முருகேசன், (சர்க்கா சங்க நிர்வாகி) சம்பத் தானம் மாதம் 5 ரூ. | | | |
| ஆர். பழனியப்ப முதலியார் நெசவாளர் | ,, | ,, | 1 ரூ. |

மற்றும் பலர் கலந்து ஆலோசித்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்காக 50 ஏக்கர் நிலம் கொடுப்பதாக வாக்களித்துள்ளனர்.

**சிற்றம்பலபுதூர் (18—9—54)**

பல்லடம் தாலூக்கா யாத்திரை கோஷ்டியுடன் மாலை 4 மணிக்கு வடுகபாளையத்திலிருந்து புறப்பட்டு அங்கு மாலை 6 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டமுடிவில் அவ்வூரிலுள்ள இரண்டு பெரிய நிலச்சுவான்தார்கள் கணபதி கவுண்டர், ஈஸ்வரமூர்த்திக் கவுண்டர் தலா 4 ஏக்கர் புஞ்சை நிலம் கொடுப்பதாக வாக்களித்தனர். ஆனால் ஷெயாரிடம் இன்னும் அதிக நில தானம் பெற வாய்ப்பு இருப்பதினால் தானப் பத்திரம் வாங்கவில்லை. யாத்திரை இன்னும் தொடர்ந்து 2 நாள் நடக்கும்.

— **ஆர். முருகேசன்**

**மூலனூர்**

மூலனூர் பிர்க்காவில், கொல்லபட்டி, கோட்டை மூலனூர், ராய்க்காவலசு முதலிய இடங்களுக்கு சர்க்கா சங்கத் தொண்டர்களும், குமாரகவுண்டன்வலசு, சோமன்கோட்டை கிராமோதய சங்க காரியதரிசிகளும் சென்று, மாலையில் பொதுக்கூட்டம் நடத்தி, பூதானம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. கூட்டத்திற்கு ஆண்களுடன் பெரும்பாலும் பெண்களும் கலந்துகொண்டார்கள். உடனடியாக நிலம் கிடைக்காவிட்டாலும், நிலம் கிடைப்பதற்கான சூழ்நிலை இருக்கிறது.

— **என். எஸ். நடேசன்**

**திருக்கோவிலூர்**

சென்ற 14—9—'54ல் பூமிதான பிரசாரத்திற்காக சிறு மதுரை, சந்தைப்பேட்டை, எடையார், மணக்குப்பம் முதலிய கிராமங்களுக்குச் சென்றுவந்தேன். அடுத்து 15, 16, 17ல் 2 தினங்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண ரெட்டியார் அவர்களுடன் சென்று நிலதானம் வசூலிக்கலாம் என்று நினைத்து ஸ்ரீ ரெட்டியார் அவர்களை எதிர்பார்த்தேன். அவர் வரவில்லை. அதன்பிறகு 16, 17ல் நான் தனியாக ஷெ கிராமங்களுக்குச் சென்று கீழ்க்கண்டவர்களிடம் பூதானம் பெற்று 18ல் காலை கடலூர் சென்று ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்களிடம் பூமிதான பத்திரங்களை சேர்ப்பித்தேன்.

**பூமிதானம் வழங்கியவர்கள்:**

| | | ஏ. | செ. |
|---|---|---|---|
| ஸ்ரீ எம். கே சுப்புராயலு நாயுடு, மணக்குப்பம் | புஞ்சை | 0 | 27 |
| ஸ்ரீ எஸ். ராமானுஜ நாயுடு, மணக்குப்பம் | ,, | 0 | 41 |
| ஸ்ரீ என். சாரங்கபாணி நாயுடு, மணக்குப்பம் | ,, | 0 | 30 |
| | | 0 | 98 |

திருக்கோவிலூர் தாலூக்காவில் ஸ்ரீ சங்கர் ராவ் தேவ் அவர்களிடம் நேரில் பூமிதானம் வழங்கியவர்கள்:—

| | | ஏ. | செ. |
|---|---|---|---|
| ஸ்ரீ எஸ். ஏ. எம். அண்ணாமலை உடையார், சிறு மதுரை | நஞ்சை | 2 | 0 |
| ஸ்ரீ எஸ். என். கிருஷ்ணசாமி நாயுடு, சந்தைப்பேட்டை | ,, | 1 | 0 |
| ஸ்ரீ எஸ். என். வீராசாமி உடையார், சிறு மதுரை | ,, | 0 | 56 |
| | | 3 | 56 |

தி. எடையார் கிராமத்தில் ஸ்ரீ விஜயராகவலு நாயுடு அவர்கள் நிலதானம் கொடுப்பதாக வாக்களித்துள்ளார்.

— **வி. கோபால்சாமி**

**திருமங்கலம்**

19—9—54ல் ஞாயிற்றுக்கிழமை திருமங்கலம் வஸ்திராலயத் தொண்டர்களும், சர்வோதய ஊழியர்களான ஸ்ரீ எஸ். பரமசாமி, ஸ்ரீ ஏ. கந்தசாமி இவர்களுடன் பூமிதானப் பிரச்சார யாத்திரை கீழக்கோட்டை, நடுக்கோட்டை, சிரியகவுண்டன்பட்டி வழியாக பூமிதான பிரச்சாரம் செய்துகொண்டும், கிராமோதய சந்தா சேர்த்துக் கொண்டும் நெடுங்குளம் போய்ச் சேர்ந்தது. பிற்பகல் நெடுங்குளம் கிராமத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. ஷெ கூட்டத்தில் மதுரை விபாக் நிர்வாகி ஸ்ரீ கோ. நடராஜன் அவர்கள் பூமிதானத்தைப்பற்றி விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். முடிவில் திருமங்கலம் பிர்க்கா டெவலப்மெண்ட் ஆபீசர் ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாசன் அவர்கள் 16 செண்ட் நன்செய் நிலம் தானமாக அன்புடன் அளித்தார்.

— **க. மு. பொன்னுசாமி**

**ராஜபாளையம்**

22—9—54ல் மதுரைராமனுட் விபாக் ஆக்டிங் சஞ்சாலக் ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்கள் தலைமையில், இராஜபாளையம் நிர்வாகி ஆர். வெங்கிடகிருஷ்ணன், உதவியாளர் கே. ஆர். ராமசாமி ராஜாவும், இராஜகுலராமன், வரகுணராமபுரம், குரிச்சியார்பட்டி கிராமங்களுக்கு பூதான பிரசாரத்திற்கு சென்றார்கள். அன்று மாலை 5 மணிக்கு வரகுணராமபுரத்தில் கிராம சாவடியில் ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூடியுள்ளவர்கள் எல்லோரும் இயன்ற அளவு நிலதானம் செய்ய வேண்டுமென தலைவரவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

கீழ்கண்டவர்கள் பூதானமும் சம்பத்துதானமும் செய்தார்கள்;

1. ஸ்தல பிரமுகர் வி. பெருமாள்சாமி நாயக்கர் 3 ஏக்கர் புஞ்சை.
2. குரிச்சியார்பட்டி, வெங்கிடசாமி நாயக்கர் (கு. கிராமசங்க காரியதரிசி) 20 செண்டு.

**சம்பத்துதானம் செய்தவர்கள்:**

1. பி. கிருஷ்ணசாமி நாயக்கர் மாதம் 2 ரூபாய்.
2. ஜி. கிருஷ்ணசாமி நாயக்கர் மாதம் 2 ரூபாய்.
3. கே. மன்னார்சாமி நாயக்கர் மாதம் 1 ரூபாய்.

இன்னும் பல அன்பர்கள், விரைவில் பூதானம் செய்வதாக வாக்களித்துள்ளார்கள். ஸ்ரீ மன்னார்சாமி வந்தனம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

— **ஆர். வெங்கிடகிருஷ்ணன்**

கிராமோதயம்

அக்டோபர் 1 1954

## கடம்பூரில் 2-வது தமிழ்நாடு சர்வோதய சம்மேளனம்.

[700 நிர்மாண ஊழியர்கள் வந்திருந்தனர்]

**பிரதிநிதிகளும் ஆரம்பமும்**

திருநெல்வேலி ஜில்லா, கடம்பூர் கிராமத்தில் தமிழ்நாடு இரண்டாவது சர்வோதய சம்மேளனம் 24—9—54-ம் தேதி காலைப் பிரார்த்தனையோடு ஆரம்பமானது. தமிழ் நாட்டின் பல ஜில்லாக்களிலிருந்தும் சர்க்காசங்கம், ஹரிஜன சேவா சங்கம் காந்திநினைவு நிதி, கஸ்தூரிபா நிதி, ஆதாரக்கல்வி, பூமிதான யக்ஞம் முதலிய காந்தீயப்பணியில் ஈடுபடும் பல ஸ்தாபனங்களிலிருந்தும் 700 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

24—9—54-ம் தேதி காலை 9மணிக்குபொதுப் பிரார்த்தனை நடந்தது. 8 மணியிலிருந்து 8-30 மணி வரை நடந்த நூற்பு வேள்வியில் பிரதிநிதிகளும், கிராம வாசிகளும் கலந்து கொண்டனர். காலை 8-30-க்கு மகாநாடு ஆரம்பமாயிற்று. மகாநாட்டிற்கு வந்திருந்த எல்லா நிர்மாண ஸ்தாபனங்களைச்சேர்ந்த பிரதிநிதிகளையும் வரவேற்று ஸ்ரீ எம். ஜி. சங்கர் ரெட்டியார் எம். எல். ஏ., அவர்கள் நமது பொது லக்ஷியமாக அரசியல் விடுதலை இருந்த காலத்தில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட்டத்தில் கலந்துகொண்டோம். தற்போது பொருளாதார விடுதலை நமது பொது லக்ஷியமாக இருக்கிறது. பூமிதான இயக்கம் இதற்கான சாதனமாக நடந்துவருகிறது. ஆகவே எல்லாவிதமான காந்திய நிர்மாண ஊழியர்களும், பூமிதான இயக்கத்தில் பங்குகொண்டு அன்பு, அஹிம்சை ஆகிய காந்தீய வழிகளில் நம் நாட்டிற்கு பொருளாதார சுதந்திரம் கிடைக்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அகில இந்திய சர்வோதய சமாஜக் காரிய தரிசி ஸ்ரீ சங்கர்ராவ்தேவ் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசினார்.

**பொருளாதார சமத்துவம் அஹிம்சையின் ஆத்மா.**

மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப்பேசிய ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்கள் வந்திருக்கும் அனைவரும் ஒரே சர்வோதயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறி சர்வோதய சம்மேளனத்திற்கு இவ்வளவு பெருவாரியாக பிரதிநிதிகள் வந்திருப்பதைக்குறித்து மகிழ்ச்சி தெரிவித்து கீழ்கண்டவாறு பேசினார்:—

**கடையனுக்கும் கடைத்தேற்றம்**

"கடையனுக்கும் கடைத்தேற்ற மென்ற சர்வோதய லக்ஷியமும் அந்த சர்வோதய சமுதாயக் கற்பனையும் காந்திஜீயினுடையது. இந்த சர்வோதயத்தில் உடல் சுகம் மட்டும் அடக்கமில்லை. ஆத்ம சுகத்திற்காக உடல் சுகம் ஒரு கருவிதான். ஆகவே அஹிம்சை அதற்கான வழியாக இருக்க வேண்டும். சத்தியமும், அஹிம்சையும், காந்திஜீயின் புதிய கற்பனையல்ல. அவருக்கு முன்பே பல பெரியார்கள் அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். ஆனால் சத்தியத்தையும், அஹிம்சையையும் அதுவரை ஆசிரமம், மடம், கோயில் இவைகளில்தான் அடக்கிவைத்திருந்தனர். அவற்றை பொதுஜனங்களுக்காக கடைத்தெருவிற்குக் கொண்டுவந்த பெருமை காந்திஜீயைச்சாரும். சத்தியம், அஹிம்சை இவற்றின் வழியில் சென்று ஆத்மசுகம் அடைந்து மோட்சமடைய முனிபுங்கவர்களால் தான் முடியுமென்று அதுவரை சொல்லிவந்தனர். ஆனால் எல்லோரும் மோட்சத்தை அடைய வழியுண்டென்று காந்திஜி சொன்னார். எல்லோருக்கும் கிடைக்காத மோட்சம் எனக்கு வேண்டாமென்றார். குடும்ப வாழ்க்கையையே மோட்ச சாதனமாக ஆக்கினார். குறிப்பிட்ட மக்களுக்குத்தான் மோட்சம் கிடைக்குமென்ற வாக்கை ஒப்புக்கொள்ள மறுத்தார். அதற்காக எல்லோருக்கும் இகலோகத்திலேயே மோட்சம் கிடைக்க சர்வோதய சமுதாயத்தை ஏற்படுத்த எண்ணங்கொண்டார். இதை சிருஷ்டிக்க நிர்மாணத்திட்டங்களை காந்திஜீ நமக்கு ஈந்தார்.

**சமூக சீர்திருத்தமும், சமூகப் புரட்சியும்**

இதற்கு மூன்னால் சமூகச் சீர்திருத்தம் என்ற பெயரால்தான் தொண்டுசெய்தனர். அதனால் ஒரு புதிய சமுதாயம் நிர்மாணமாகாது. அதனால் காந்திஜீ காட்டிய நிர்மாணத்திட்டங்களின் ஆரம்பமும் முடிவும் ஒரு புதிய சர்வோதய சமுதாயத்தை நிர்மாணிப்பதில் சம்பந்தப்பட்டது. சர்வோதய சமுதாயத்தை அமைக்க நிர்மாணத் திட்டங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து பாடுபட வேண்டும். கதர்வேலை, ஹரிஜனசேவை, ஹிந்திப் பிரச்சாரம் முதலிய அனைத்தையும் இந்நோக்கோடு செய்தால்தான் சர்வோதய அமைப்பு சாத்தியமாகும். இந்த வேலைகள் தனித்தனியாக நடந்தாலும் இவற்றில் சர்வோதய அமைப்பு என்ற பொது லக்ஷியம் ஊடுருவி நிற்கிறது.

**ஆன்ம ஞானம்**

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே ஆத்மீக ஞானம். ஆகவே காந்திய நிர்மாணத்துறையில் தனித்தனியாக வேலை செய்தாலும் நாம் ஒன்று சேர்ந்து சர்வோதய லக்ஷியத்தைநோக்கி முன்[illegible] வேண்டும். அரசியல் சுதந்திர போராட்ட[illegible] போது ஒன்றுசேர்ந்து வேலை செய்தோம். இன்று வேறு ஒரு கடமை நம்முன் நிற்கிறது. அதுதான் பூமிதான யக்ஞம். இந்த யக்ஞத்தினுடைய லக்ஷியம் பொருளாதார சமத்துவம். பொருளாதார சமத்துவம் அஹிம்சையின் ஆத்மாவாகும் என்றார் காந்தி. ஆகவே சர்வோதய சமுதாயத்தை அமைக்க பூமிதான இயக்கம் சிறந்த வழியாக இருக்கிறது. இந்த இயக்கத்தில் ஒத்துழைப்பது நிர்மாண ஊழியர்களின் தலைசிறந்த கடமையாகும்."

மேலும் ஸ்ரீ தேவ் அவர்கள் தமிழ்நாட்டில் பல நிர்மாண ஸ்தாபனங்களுக்கும் இணைப்பாக இருந்து பணியாற்ற தமிழ்நாடு சேவாசங்கம் ஒன்று அமைப்பதுபற்றிய யோசனையை ஊழியர்கள் முன்பு சமர்ப்பித்தார்.

**நிர்மாண வேலைகளே காந்திஜிக்கு சிறந்த ஞாபகச் சின்னம்**

பின்பு ஸ்ரீ சர்தார் வேதரத்னம் அவர்கள் மகாநாட்டு காலை நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கிப்பேசுகையில் காந்திஜீக்கு சரியான ஞாபகச் சின்னம் அவருக்கு உருவச்சிலை வைப்பதல்ல. அவருக்குப் புகழைத்தந்த நிர்மாணத் திட்டங்களில் முடிந்த அளவு கிரியாம்சையால் செய்து காட்டுவதுதான் அவருக்குச்செய்யும் ஞாபகச் சின்னமாகுமென்றார்.

மாலை நடவடிக்கைகளுக்கு பிரஜாசோஷலிஸ்ட் தலைவர் ஸ்ரீ. எஸ். ஆர். சுப்பிரமணியம் தலைமை வகித்தார். "பூதான இயக்கமும் சர்வோதய லக்ஷியமும்", "தமிழ் நாட்டில் பூமிதான இயக்கம்" என்ற விஷயங்கள் பற்றிய விவாதத்தில் ஜில்லாக்களில் வேலை செய்யும் முக்கிய பூமிதான ஊழியர்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீ ஆர். டி. பி. சுப்பிரமணியம் ஸ்ரீ டி. டி. திருமலை, ஸ்ரீ முனகால பட்டாபி ராமையா, ஸ்ரீ எம். ஆர். பழனிச்சாமி ஸ்ரீ டி. கே. ஸ்ரீனிவாசன், ஸ்ரீ டி. பி. ராமசாமி, ஸ்ரீ எம். ராமகிருஷ்ண ரெட்டியார் ஆகியவர்கள் முறையே திருநெல்வேலி, ராமனுதபுரம், திருச்சி, தஞ்சை, கோவை தென்னுற்காடு ஆகிய ஜில்லாக்களின் சார்பாக மேற்கூறிய விவாதத்தில் கலந்து கொண்டு தங்கள் ஜில்லாக்களில் இதுவரை நடந்த பூமிதான வேலை விபரங்களையும் தெரிவித்தனர்.

மாலை 6 மணிக்கு நடந்த பிரார்த்தனைக்குப் பின் ஸ்ரீ தேவ் அவர்கள் பொதுக்கூட்டத்தில் பேசினர். ஸ்ரீ எம். எம். சுப்பிரமணியம் திருநெல்வேலி ஜில்லாவில் கடந்த இரண்டு மூன்று தினங்களுக்குள் வசூலான 154 ஏக்கர் பூமிதான விபரத்தை வாசித்தளித்தார். குப்பண்ணுபுரத்தைச் சேர்ந்த ஸ்ரீ சங்குத்தலைவர் தனதுசொத்தில் ஆறில் ஒரு பங்காக 4 ஏக்கர், 25 சென்ட் நிலம் தானமாக அளித்தார். இரவு 8 மணிக்கு திம்மராஜபுரம் இளைஞர் முன்னேற்றச்சங்கத்தாரால் 'புது வாழ்வு' என்ற பூமிதான சம்பந்தமான நாடகம் ஒன்று நடத்திக் காண்பிக்கப்பட்டது.

கடம்பூர்,
24—9—54.

**எம். ஜி. சங்கர் ரெட்டியார்,**
தலைவர், தமிழ்நாடு சர்வோதய சம்மேளன வரவேற்புக்கமிட்டி.

## "சென்னை கவர்னரின் சர்க்கா ஜயந்தி செய்தி"

மகாத்மா காந்தியடிகளின் மாண்புமிக்க தலைமையின் கீழ், நமது லட்சியத்தை எய்த போராடி வந்த 35 ஆண்டுகளில், நமது விடுதலைப் போராட்டம் எத்தனையோ நிலைமையில் மாறுபாடுகள், கொள்கைகளில் ... வங்களில் மாற்றம் கண்டிருக்கிறது. எனினும் இந்த நெடுங்காலத்தே, நமது சமூக, அரசியல் பொருளாதார சுதந்திரத்தின் அசைக்கமுடியாத நிலையாக இருந்துவரும் ஒரே சின்னம் **கதர்.**

**கதர்,** ஏழையையும்—பணக்காரனையும் ஒரே மேடையில் கொண்டுவந்தது, கிராமத்தையும் நகரத்தையும் ஒன்றோடொன்று நெருங்கச் செய்தது என்ற வகையில் நமது சமூக விடுதலைக்கு உதவியிருக்கிறது. அரசியல் துறையில், சுதந்திரமாகப் போராடிய யாவருக்கும் ஒரு (யூனிபாரமாக) அணியுடையாக இருந்து நம்மில் தன்மதிப்பையும், தன்னம்பிக்கையையும் ஊட்டியிருக்கிறது. நமது நாடுபோன்ற சாதனங்களற்ற ஓர் நாட்டின் வறுமைப் பிரச்னை, நம்மை சுயமுயற்சியாளராக்கி, சுயநம்பிக்கையோடு, சுயதேவைப் பூர்த்திசெய்து கொள்பவராகச் செய்யக்கூடிய குடிசைத்தொழில்களை ஊக்குவதன் மூலம்தான் தீர்க்கப்பட முடியும், என்பதை நமக்குக்காட்டி பொருளாதார விடுதலையின் சின்னமாக விளங்குகிறது கதர். துரதிர்ஷ்டமாக, சுயராஜ்யம் கிடைத்த பின்னர், நாம் ஓரளவு சோம்பலுற்று நமக்கு சுதந்திரம் பெற்றுத்தந்த தேசிய வாழ்க்கையின் மூல அம்சங்களையே புறக்கணித்து வருகிறோம். ஆகவே, ஒரு துறையில் நாம் எதைப்பெற்றோமோ அதை ஆபத்திற்குள்ளாக்குகிறோம்.

எனவே, அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் போர்டின் சார்பில் கதர் விற்பனைக்கும், அபிவிருத்திக்கும் நாடு பூராவிலும் ஒரு பரந்த இயக்கம் துவங்கியுள்ளது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாண்டு காந்தி ஜயந்தி விழா, தனது பிறந்ததினத்தைக்குறிக்கும் ஒரு மாபெரும் லட்சியத்தின் உன்னத ஸ்திதிக்கு உதவி செய்யும் என்பதில் ஐயமில்லை. இதன் மூலம், கதரை உபயோகிப்பதில் நமது உற்சாகம் புத்துயிர் பெறும்.

சேர்ந்துள்ள எல்லா கதர் ஸ்டாக்கும் விற்பனையாவது மட்டிலுமின்றி, நாட்டில் இன்று இருந்துவரும் குடிசைத் தொழில்களோடு, மறைந்து மங்கிவரும் தொழில்களும் புனர்வாழ்வு பெற்று எல்லோருக்கும், நம்பிக்கையையும், நல்வாழ்வையும், மகிழ்ச்சியையும் அளிக்கத்தக்க நடவடிக்கை எடுக்க உதவுவோமாக.

ராஜபவன்,
கிண்டி, சென்னை.
25—9—'54

**ஸ்ரீ பிரகாசா,**
சென்னை கவர்னர்.

## தென்னுற்காடு ஜில்லா பூமிதான யாத்திரை,

### சில விசேஷ குறிப்புகள்

இந்த இதழ் "கிராமோதயம்" பக்கம் 106ல் தென்னுற்காடு ஜில்லாவில் ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்கள் சுற்றுப்பிரயாணத்தைப் பற்றி திரு. ச. ஜெகந்நாதன் (ராஜ்ய பூதான கமிட்டி கன்வீனர்,) எழுதியுள்ள அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. சென்ற மூன்று வருடங்களாக தென்னுற்காடு ஜில்லாவில் ஸ்தம்பித்து நின்று வந்த இயக்கம் சென்ற இரண்டு மாதங்களில் புது வேகத்துடன் பரவி வருகிறதென்று காண உற்சாகப்படுகிறோம்.

திண்டிவனத்தில் திடீரென்று எதிர்பாராத விதமாகவே ஸ்ரீ தேவ்ஜி அவர்களிடம் திரு கே. எஸ். வெங்கிடகிருஷ்ண ரெட்டியார், திரு டி. ஆ. ராஜாராம் ரெட்டியார். திரு ஏ. வி. வெங்கிடசாமி ரெட்டியார் ஆகியோர் சுமார் 40 ஏக்கர் நில தானமளித்தது யாத்திரைக்கு பெரும் நம்பிக்கையூட்டிற்று.

கடலூர் பொதுக்கூட்டத்தில் சிறுகிராமம் ஸ்ரீ விட்டல் ஸ்ரீனிவாசராவ் அவர்கள் மூன்றும் முறையாக 1 ஏக்கர் நஞ்சை ஸ்ரீ தேவ்ஜியிடம் தானமளித்ததானது ஸ்ரீ ராவ்ஜி இயக்கத்தில் எவ்வளவு மூழ்கியுள்ளார் என்பதைக் காட்டுகிறது.

திண்டிவனம் கௌரவ மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ வெங்கடபதி ரெட்டியார் அவர்கள் 5 ஏக்கர் புஞ்சை நிலத்தை ஊரை விட்டு வெளியே செல்லும் தருணத்தில் ஸ்ரீ தேவ்ஜியிடம் தானம் கொடுத்து பத்திரத்தை பூர்த்தி செய்து கொடுத்ததானது, இயக்கத்தின் தெய்வீகத் தன்மையைத்தான் ஞாபகமூட்டியது.

யாத்திரை முழுவதிலும் தென்னுற்காடு ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உப தலைவர் ஸ்ரீ எஸ். ஏ. எம். அண்ணுமலை உடையார் அவர்கள் உடன் இருந்து உதவிவந்தார்கள். அவர் தனது அருமையான நஞ்சை நிலம் 2 ஏக்கர் தானமாகவும் அளித்ததானது, ஒரு பெரும் மன மாற்றத்தையே ஜில்லா நிலச்சுவான்தாரர்களுக்குள் ஏற்படுத்தாமலிருக்காது.

மணக்குப்பம் ஸ்ரீ சுப்பராயலு நாயுடு, ஸ்ரீ ராமானுஜ நாயுடு, கர்ணம் ஸ்ரீ சாரங்கபாணி நாயுடு ஆகியோரின் 98 செண்டு நிலதானம் அந்த கிராமங்களில் பூமிதான யக்ஞம் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு சுப ஆரம்பமாக இருந்தன.

கடலூர் பொதுக்கூட்டத்திற்குப் பிறகு சிதம்பரம் செல்லும் வழியில் பூண்டியாங்குப்பத்தில்

(தொடர்ச்சி 115-ம் பக்கம் பார்க்க)

3-JAN 1956
MADRAS



# தொழில்நுணுக்கங்களும், வேலையில்லாத் திண்டாட்டமும்.

**வேலை மிச்சமும்-ஆட்குறைப்பும்**

சமீப காலத்தில் இயந்திரத் தொழிற்சாலைகளில் தானே இயங்கும் நுணுக்கக் கருவிகளைப் புகுத்தி ஆட்களைக் குறைப்பதற்கான பேச்சு அடிக்கடி கேள்விப்படுகிறோம். புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்தி, தொழிற்சாலை இயந்திரங்களைப் புதுப்பித்தாலன்றி, உற்பத்தியை அதிகரிப்பதோ, உற்பத்திச் செலவுகளைக்குறைத்து, பொருட்களின் விலைகளைக் குறைப்பதோ, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோ சாத்தியமில்லை என்று பன்முறை எடுத்துரைப்பதற்கு, இயந்திரத் தொழிலதிபர்களுக்கு வக்காலத்துப் பேசுபவர்கள் சளைப்பதில்லை.

**நாம் நம்மையே ஏமாற்றிக்கொள்ளுகிறோம்**

நாம் ஆரம்பத்திலேயே விஞ்ஞான ரீதியில் இயந்திர சாதனங்களை சீரமைப்பதையோ, நுண்ணிய கருவிகளைப் புகுத்துவதையோ ஆட்சேபணை செய்யவில்லை. ஆனால் இம்மாதிரி சீரமைப்பதாலும், புதுக் கருவிகளைப் புகுத்துவதாலும் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததா? மக்களுக்கு வேலைகொடுக்கும் திறன் கூடிற்று? என்று பார்க்க வேண்டும். வேறு சில நாடுகளை கண்மூடித்தனமாக பின்பற்றுவதனால் நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்வோம் என்பதையும் மறந்துவிடக் கூடாது. நம் நாட்டின் நிலை இயந்திரமயமாக்கப்படிருக்கும் அநேக மேனாடுகளின் சூழ்நிலைக்கு முற்றிலும் மாறுபட்டிருக்கிறது.

**புள்ளிவிவரங்கள் கூறும் சோகக்கதை!**

சமீபத்தில் நடந்த ஜனகணிதைப் புள்ளிவிவரங்களிலிருந்து தன்னைத்தானே சம்ரக்ஷணை செய்துகொள்ளும் நபர்கள் நமது தேசத்தில் மிகவும் குறைவு என்பதைக் காட்டும் புள்ளிவிவரங்களை தருகிறோம்.

| | ஜனத்தொகை கோடிக் கணக்கில். | மொத்த ஜனத் தொகையில் சதவிகிதம். |
|---|---|---|
| 1. தன்னைத்தானே சம்ரக்ஷணை செய்துகொள்பவர்கள் | 10·44 | 29·27% |
| 2. சம்பாதிக்கக்கூடிய உறவினர்கள் (இவர்கள் வருமானத்தால் இவர்கள் வாழ்க்கைக்கு அடிப்படையான தேவைகளையே பூர்த்தி செய்ய இயலாது) | 3·79 | 10·64% |
| 3. சம்பாதிக்காத உறவினர்கள் | 21·43 | 60·09% |

ஜனத்தொகையில் சுமார் 29 சதவிகிதத்தினர் முழுமையாக சுமார் 60 சதவிகிதத்தினரையும், ஓரளவிற்கு 11 சதவிகிதத்தினரையும் பராமரித்து வருகின்றனர் என்பதைப் பார்க்க துயரமடைகிறோம்.

**10 கோடி மக்கள் 25 கோடி மக்களை பராமரித்து வருகிறார்கள்**

சுமார் 10·4 கோடி மக்கள் தம் வாழ்க்கைக்கே திண்டாடிக்கொண்டு தங்களை அண்டிப் பிழைக்கும் சுமார் 21·4 கோடி மக்களை வருடம் பூராவும் பராமரிக்க வேண்டியிருக்கிறது. இந்த 21·4 கோடி மக்களுக்கு யாதொரு வேலையும் இல்லாமல் தங்கள் வாழ்க்கைக்கு ஒன்றும் தேடிக்கொள்ள முடிவதில்லை. அத்துடன் இவர்கள் சுமார் 3·7 கோடி ஓரளவு சம்பாதிக்கும் உறவினர்களுக்கும் உதவியளிக்க வேண்டியிருக்கிறது.

வயோதிகர்கள், குழந்தைகள், நோயாளிகள் வேலை செய்யத் தகுதியற்ற முடவர்கள் போன்றவர்களை தாராளமாக கணக்கிலிருந்து நீக்கி விட்டாலும் பிறரை அண்டிப் பிழைப்போர் ஜனத்தொகை சுமார் 10 கோடி ஆகிறது. நாம் உண்மையாக முன்னேற வேண்டுமானால் இந்த 10 கோடி மக்களுக்கு வேலைதேடி கொடுக்கவேண்டும்.

**உற்பத்தி பெருகுவதால் மட்டும் நாடு முன்னேறாது!**

இயந்திரத் தொழில்களில் நுண்ணிய கருவிகளைப் புகுத்தி, வேலை மிச்சம் செய்யும் திட்டத்தை மேற்கூறிய விபரங்களை மனதிலிருத்திப் பார்க்க வேண்டும். நாட்டில் வேலையில்லாமல் திண்டாடுபவர்களுக்குத் தகுந்த வேலை கிடைக்காவிடில், சிறிதளவு உற்பத்திப் பொருட்களின் விலை குறைவதாலும், உற்பத்தி பெருகுவதாலும் மட்டும் நாட்டின் பொருளாதார நிலை சீர்பட்டு விடாது. நேர்மாறாக தொழில் நுணுக்கங்களை, சமூகக் கருத்துக்களைப் புறக்கணித்து, புகுத்துவோமாயின், பல்லாயிரக் கணக்கான மக்களை வேலை இழக்கச் செய்து, நிலைமையை மேலும் சீர்குலையச் செய்யப்படும்.

**பஞ்சாலைத் தொழிலாளிகளும் பாதிக்கப்படுவார்கள்**

உதாரணமாக பஞ்சாலைகளில் ஒரு நெசவாளி இரண்டு அல்லது மூன்று விசைத் தறிகளை சாதாரணமாக மேற்பார்வையிட்டு வருவார். தானே இயங்கும் தறிகளைப் புகுத்தினால் ஒரு நபர் சுமார் 32 தறிகளை கவனித்து வருவது சாத்தியம். இதனால் நெசவுப் பகுதியில் வேலைசெய்யும் பல்லாயிரக் கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, வேலை இழக்கவும் நேரிடும்,

பஞ்சாலைகளில் இன்று வேலை செய்துவரும் சுமார் 2 லட்சம் நபர்களில் சுமார் 75,000 பேர்களை தான், தொழில் நுணுக்கங்களைப் புகுத்திய பிறகு வேலையில் வைத்துக்கொள்ள முடியும் என்று பஞ்சாலை முதலாளிகள் சங்கத்தின் மாஜி தலைவர் ஸ்ரீ நெவிலி என். வாடியா கூறுகிறார்! இந்தக் கணக்கே 48 தறிகளுக்கு 9 பேர்கள் என்று மிகவும் தாராளமாக கணக்கிடப்பட்டு தயாரித்திருப்பது!

**வேலைக்கு காத்திருக்கவேண்டும்**

இதனால் உற்பத்தியாகும் துணியின் விலை இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் கெஜத்திற்கு அரையணா குறையக்கூடும். இந்த விலை குறைவால் மக்கள் அதிகம் துணி வாங்குவார்கள்! அதனால் உற்பத்தியைப் பெருக்க அதிக விசைத் தறிகள் வேண்டியிருக்கும்! அவைகளை இயக்கும் பொருட்டு இந்த வேலை இழந்த நெசவுப் பகுதியில் வேலை செய்யும் ஆலைத் தொழிலாளிகள் காத்திருக்கவேண்டும்.

**அமெரிக்காவிலும் சர்க்கார் உதவி பெறும் 30 லட்சம் மக்களிருக்கின்றனர்**

நம் நாட்டின் நிலையை மறந்து பிற நாடுகளில் இம்முறைகள் பயனளித்திருப்பதைக் கண்டு நாம் ஏமாற்றமடையக்கூடாது. தொழில் நுணுக்கங்களில் முன்னணியிலிருக்கும் அமெரிக்காவில்கூட சுமார் 30 லட்சம்பேர்கள் சர்க்கார் உதவியால்தான் வாழ்க்கை நடத்தவேண்டியிருக்கிறது. நம் நாட்டில் சுமார் 70 சதவிகிதம் மக்கள் விவசாயத்தை நம்பிப் பிழைப்பவர்கள். இவர்களுக்கு மிகவும் தாராளமாகக் கணக்கிட்டாலும் 3 முதல் 4 மாதங்களுக்கு முற்றிலும் வேலை இல்லை. வருடாந்திர ஜனத்தொகை அதிகரிப்பு சுமார் 40 லட்சம் இருக்கும். இதில் வயது வந்து, வேலை தேடிப்

பிழைக்கத் தகுந்தவர்கள் வருடந்தோறும் சுமார் 18 லட்சம் இருப்பார்கள். ஆகையால் தற்சமயம் வேலையில்லாதிருப்போருக்கு வேலை தேடித்தருவதோடல்லாமல், வருடந்தோறும் ஜனத்தொகை பெருக்கம் காரணமாக புதிதாக வேலைக்கு வரும் சுமார் 18 லட்சம் மக்களுக்கும் வேலை தேடிக் கொடுக்கவேண்டும்.

**பெரும் பிரச்சினை**

இம்மாதிரி சுமார் 10 முதல் 12 கோடி மக்கள் அடங்கிய ஒரு பிரம்மாண்டமான வேலையில்லாப் பட்டாளத்திற்கு வேலை தேடிக்கொடுப்பது ஒரு சாதாரண வேலையல்ல. தொழில் நுணுக்கங்களையும், வேலையை மிச்சப்படுத்தும் முறைகளையும், இயந்திரத் தொழில்களில் புகுத்துவதற்கு முன், அதனால் வேலை இழக்கக் கூடிய தொழிலாளிகளுக்கு வேலைகொடுக்கும் பொருட்டு புது வகைகளை திட்டமிட்டு தயாரித்திருக்கவேண்டும்.

**மனித சக்தியை ஈடுபடுத்தித் தொழில் வளரவேண்டும்**

நாட்டில் நிலவும் தீவிரமான வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை, நாட்டில் மலிந்துகிடக்கும் மனித சக்தியைப் புறக்கணிப்பதால் தீர்த்து விடமுடியாது. உற்பத்தி பெருகுவதால் மட்டும் பொருளாதார முன்னேற்றம் அடைந்துவிட்டதாக கருத முடியாது. நமது பஞ்சாலைகளும், சிமண்டு, சணல் தொழில்களும் ஐந்து ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த உற்பத்தி லட்சியத்தை யடைந்தபொழுதிலும், நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் காண்கிறோம். பெருவாரியான உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளால் இந்தப் பிரச்னையின் எல்லையைக் காண முடியாது. நம் நாடு போன்ற ஏழை நாடுகள் பெரிய தொழில்களை நிறுவி, வளர்ப்பதற்குரிய மூலதனம் சேகரிப்பதும் சாத்தியமில்லை.

ஆகையால் உடனடியாக நம் நாட்டு மக்களில் 60 சதவிகிதத்தினருக்கு வேலை தேடிக் கொடுத்து, அவர்களுக்கு வாழ்க்கைக்கு ஒரு வழி வகுத்துக் கொடுப்பதற்கு மனித சக்தியை முக்கியமாகக் கொண்ட தொழிலபிவிருத்தித் திட்டங்கள் வகுத்தாகவேண்டும்.

— பி. ஸ்ரீனிவாசசாரி.

[*By Courtsey! Harijan, 14-5-'54*].

## விஞ்ஞான ரீதியில் அரிசி ஆராய்ச்சி

**[மில்கள் மூலம் அரிசி குத்தப்படும் தொழிலை விட கைக்குத்தல் அரிசி தயாரிப்புக்கு அதிக ஊக்கமளிப்பது சம்பந்தமாக சர்க்காருக்கு ஆலோசனை கூற ஒரு கமிட்டியை நியமிக்க உத்தேசித்திருப்பதாக சென்ற 10-9-'54 தேதி புது டில்லி மக்கள் சபையில் உணவு, விவசாய இலாகா மந்திரி கித்வாய் அறிவித்தார். இக் கமிட்டி 'அரிசிக்கமிட்டி' என்று அழைக்கப்படும்.**

**நாட்டிலுள்ள மில் அரிசி தயாரிப்புத் தொழில், கைக்குத்தலரிசி தயாரிப்பு தொழில் நிலவரம் பற்றி இக்கமிட்டி பரிசீலனை செய்யும். மந்திரி கித்வாய் மேலும் கூறியதாவது: எண்ணை ஆட்டும் தொழில் சம்பந்தமாக நிபுணர் கமிட்டி ஒன்றை இந்திய சர்க்கார் நியமிக்கப்போகின்றனர். செக்கு மூலம் எண்ணை ஆட்டும் தொழில், மில்கள் மூலம் எண்ணை ஆட்டும் தொழில் இரண்டின் நிலவரம்பற்றி ஆராய்ச்சி நடைபெறும். எந்த முறையில் எண்ணைத் தொழில் அபிவிருத்தி நடைபெறவேண்டும் என்பது பற்றி சர்க்காருக்கு இக்கமிட்டி சிபார்சுகள் சமர்ப்பிக்கும்**

**கீழே தந்துள்ள விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரை இந்த கமிட்டிகளின் ஆராய்ச்சிக்கு உதவும். சாதாரண பொதுமக்களுக்கும் வழிகாட்டக்கூடும்.**

**மில்லில் தீட்டிய அரிசியை அதிக நாட்களுக்குக் கைவசம் வைத்துக்கொள்ளலாம் என்ற காரணத்தால் மில்லில் அரிசியைத் தீட்டலாம் என்ற பொருள்கொள்ள வேண்டியதில்லை. அரிசியைக் காட்டிலும் அதிக நாட்கள் நெல்லாகவே சேமித்து வைப்பது சாத்தியம்!**

**அரிசியின் போஷாக்குத் தன்மை இதர தானியங்களைக் காட்டிலும் குறைந்ததல்ல. ஆனால் அதைத் தயாரிக்கும் முறையிலும்; சமையல் செய்யும் வகையிலும்தான் அதிலுள்ள உயிர்ச் சத்துகள் நஷ்டமடைகின்றன.** — ஆசிரியர்]

**உணவு தானியங்களின் தன்மை ஒன்றே**

கோதுமை, சோளம், அரிசி இம்மூன்றும் அவைகளின் அமைப்பிலும், உணவுப் பொருள் என்ற முறையிலும் ஒரே தன்மை உடையவைகளே. பொதுவாகக் கூறுமிடத்து அவைகள் மட்டும் தனியாக உபயோகிக்கப்பட்டால் முழு உணவு ஆகாது. ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான எல்லா சத்துக்களும், போதுமான அளவில் அவைகளில் கிடையாது. எனவே கோதுமையைக் காட்டிலும் அரிசி ஒரு குறைந்த சத்துள்ள ஆகாரம் என்ற சந்தேகம் எழக் காரணம் யாது?

**பலமுறை பக்குவங்களாலும் சத்திழக்கும் அரிசி**

நெல் அறுவடையில் இருந்து சாப்பிடுவதற்கு சமையல் செய்யும் வரையில் பல முறைகளில் பக்குவம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தடவையிலும் அதன் போஷாக்கு சக்தி கொஞ்சம் கொஞ்சமாக நஷ்டமடைகிறது. இம்மாதிரியான நஷ்டம் இதர தானியங்களிலும் ஏற்படுகிறது. ஆனால் அரிசியில்தான் இந்நஷ்டம் அதிகம், அதன் அமைப்பே இதற்கு ஒரு முக்கியமான காரணம். இதர தானியங்களைக் காட்டிலும் நெல்லின் மேல் உறையான உமியை எடுப்பது இயந்திர சாதனங்களுக்கு மிக எளிதாக இருக்கிறது.

அரிசியின் மேல் ஒட்டிக்கொண்டிருக்கும் தவிட்டில்தான் போஷாக்கு சத்து இருக்கிறது. அது உமியுடன் ஒட்டி இருப்பதால் உமி நீக்கப்படும்பொழுது அதுவும் போய்விடுகிறது. அதனால் அரிசியின் போஷாக்குத் தன்மை பெரிதும் பாதகம் அடைகிறது. எனவே மெஷின் மூலம் நெல் குத்துவதாலும், தீட்டுவதாலும் போஷாக்குத் தன்மை நஷ்டமடைகிறது. அதிகமாக தீட்ட தீட்ட உணவு சத்து நஷ்டம் அதிகரித்துக்கொண்டே போகிறது.

**எடையைக் காட்டிலும் உயிர்ச் சத்துகள் நஷ்டமதிகம்**

தானியத்தின் மொத்த எடையில் அரைக்கால் பாகமோ அல்லது அதற்குக் கொஞ்சம் அதிகமாகவோதான் குத்தும்பொழுது குறைகிறது. ஆனால் உணவுச்சத்து நஷ்டமோ இதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகும். "புரோதத்தில்" இந்த நஷ்டம் 15 முதல் 20 சதம் வரையிலும் "மினரல்" சத்து பாதியாகவும் குறையுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அரிசியில் "தியாமைன்" "நிகோடினிக் ஆஸிட்" என்ற உயிர்ச் சத்துகள் ஏற்கனவே மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. அவைகள் மேலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டு நஷ்டமடைகின்றன.

**பெரி பெரிக்கு அடிகோலும் தீட்டிய அரிசி**

மில்களில் நெல் குத்துவதினாலும், பாலிஷ் செய்வதினாலும் உயிர்ச் சத்துகள் நஷ்டமடைகின்றனவென்று கண்டு பிடித்த பிறகே இதர உணவுச் சத்துகள் நஷ்டமடைகின்றனவா என்ற ஆராய்ச்சிகள் துவக்கப்பட்டன. 50, 60 வருஷங்

3-JAN 1956

களுக்கு முன்பு நன்றாகத் தீட்டிய அரிசியையே முக்கிய உணவாகக்கொண்ட ஜப்பானிய மாலுமிகள் "பெரி பெரி" என்ற நோயால் பீடிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு அரிசிக்குப் பதிலாக கோதுமையையும், பார்லியையும் கொடுத்ததுமே இந்த நோய் குறையத் தொடங்கியது. அதற்குப் பிறகு இந்தியா, பிலிப்பைன் தீவுகள், ஜாவா முதலிய இடங்களில் செய்த ஆராய்ச்சியின் பயனாக மில்லில் அரைத்துத் தீட்டிய அரிசியை முக்கிய உணவாக உட்கொண்டால் "பெரி பெரி" என்ற நோய் உண்டாகிறது என்று சந்தேகமற நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

**புழுங்கலரிசி, பச்சரிசியைக் காட்டிலும் சிறந்தது.**

புழுங்கலரிசி, பச்சரிசியைக் காட்டிலும் சிறந்த தென்று ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது. குத்துவதில் பச்சரிசியைக் காட்டிலும் குறைவாகவே புழுங்கலரிசியில் சேதமாகிறது. நெல்லை வேகவைக்கும் பொழுதும் அதில் உள்ள உயிர்ச் சத்துகள் அரிசியுடன் அதிகமாக ஒட்டிக்கொள்கின்றன. எனவே அறைவையால் அதிகமாக நஷ்டமடைவதில்லை.

**பழக்க வழக்கத்தில் மாறுதல்கள்**

மேலே கூறியவைகளில் இருந்து அரிசியின் போஷாக்கு சக்தியையும், உயிர்ச் சத்தையும் பாதுகாக்க மில்கள் மூலம் நெல் அறைப்பதைத் தடுத்தும், கைக்குத்தரிசியை ஆதரித்தும், புழுங்கலரிசியைப் பற்றி பிரசாரம் செய்தாலும் போதுமென்று தோன்றும். ஆனால் இப்பிரச்னை அவ்வளவு சுலபமல்ல. அரிசியை முழுத் தானியமாகவே வேகவைத்து உண்கிறார்கள். மற்ற தானியங்கள் மாவாக அறைக்கப்பட்டு ரொட்டிகளாக்கி சாப்பிடப் படுகிறது. ஆனால் சமைக்கப்படும் பொருள் வெண்மையாகவும், பார்வையாகவும், கண்ணுக்கு கவர்ச்சியாகவும் இருக்கவேண்டும் என்ற ஒரு பழக்கம் தற்காலத்தில் ஏற்பட்டு விட்டது.

பிரசாரத்தின் மூலமாகவோ, அல்லது சட்டத்தின் மூலமாகவோ மில்களில் நெல் அறைப்பதையும், பாலிஷ் செய்வதையும் தடுக்க முடியாமைக்கு ஒரு முக்கிய காரணமுண்டு. அதாவது சுத்தமாக்கப்பட்டு, தீட்டிய அரிசியை கைக்குத்தரிசியைக் காட்டிலும் அதிக நாட்கள் கெடாமல் பத்திரப்படுத்தி வைக்க முடியும்.

**சமையல் செய்வதில் நஷ்டம்**

நெல் அறைக்கும் பொழுதும், தீட்டும்பொழுதும் ஏற்படும் நஷ்டமல்லாமல் சமையல் செய்யும் முறையிலும் நஷ்டம் ஏற்படுகிறது. **கிக், வில்லியம்** என்பவர்கள் கீழே குறிப்பிட்ட வகையில் சோதனை நடத்தி இருக்கிறார்கள்.

(1) மூன்று தடவை கழுவுதல். ஒரு படி அரிசியில் அதே அளவு தண்ணீர் விட்டு மூன்று தடவை அலசிக் கொட்டுதல்.

(2) ஆவியில் வேகவைத்தல். ஒரு படி அரிசிக்கு ஒன்றறைப் படி தண்ணீர் கலந்து மூடிய பாத்திரத்தில் ஆவியால் வேகவைத்தல். தண்ணீர் சுண்டியவுடன் கஞ்சி வடிக்காமல் இறக்கி விடுதல்.

(3) திறந்த பாத்திரத்தில் சமைத்தல். ஒரு படி அரிசியை ஒரு திறந்த பாத்திரத்தில் 8, 10 படி தண்ணீர் வைத்து வேகவைத்த பிறகு கஞ்சியை வடித்து விடுதல். இம்முறையினால் 40 முதல் 50 சதம் வரையில் "தயாமின்" என்ற சத்து நஷ்டமடைவது கண்டுபிடிக்கப்பட்டது. முதல் முறையில் 10 முதல் 15 சதம் வரையில் நஷ்டமும் ஆவியால் வேகவைத்தலில்தான் மிகவும் குறைந்த அளவுக்கு நஷ்டமேற்பட்டது என்றும் கண்டு பிடிக்கப்பட்டது.

எனவே அரிசி, கோதுமை போன்ற தானியங்களைக் காட்டிலும் சத்தில் குறைந்த தானியமல்ல என்பது தெரியவரும். ஆனால் அதைக் குத்துவதிலும், தீட்டுவதிலும்தான் அதிலுள்ள உயிர்ச் சத்துகள் நஷ்டமடைகின்றன எனத் தெரியவருகிறது. மேலும் கோதுமை உபயோகிப்பவர்களைக் காட்டிலும், அரிசி உபயோகிப்போரின் உணவுக் குறைபாட்டுக்கு மற்றொரு காரணமும் உண்டு. இந்தக் காரணம் பொருளாதார சம்பந்தமுடையது. வழி முறைகள் சொல்லுவதற்கு முன்பு இதைப் பற்றி ஆராயவேண்டியது அவசியம்.

**உணவுத் திட்டம் மாற்றப் படவேண்டும்**

சாதாரண மனிதனுக்கு தினம் 2,500 காலரி உஷ்ணம் தரக்கூடிய உணவு வேண்டும். கோதுமை உண்பவர்களுக்கு 1000 காலரி சத்து கோதுமையில் இருந்தே கிடைத்து விடுகிறது. மிகுதி காய்கறி, முட்டை, பால் முதலியவைகளில் இருந்து கிடைத்துவிடுகிறது. இந்தியா போன்ற அரிசியை ஆகாரமாக உள்ள தேசங்களில் சராசரி நபருக்கு 1,800 முதல் 2,000 காலரி தான் கிடைக்கிறது. இது மிகக் குறைவென தெரியவரும். இதிலும் 1000, 1200 காலரி முக்கிய உணவாகிய அரிசியில் இருந்துதான் கிடைக்கிறது. எனவே இது சீரான உணவு ஆகாது என்பதும் தெரியவரும். இக் குறையை அதிகப்படி பால் சேர்த்துக்கொள்வதினால் நேர் செய்யமுடியும். ஆனால் பாலுக்குப் பணம் வேண்டும்.

இந்தப் பிரச்னையை தேசீயப் பிரச்னையாக எடுத்துக்கொண்டு சரியானபடி திட்டமிட்டு தீர்த்துவிட முடியும். இதற்கிடையில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் உணவுத் திட்டத்தில் கூடிய வரையில் வசதிக்கேற்ப மாறுதல் செய்து நல்ல பலனை அடையலாம்.

— **எம். ஆர். பாலகிருஷ்ணன்**

["ஹிந்து" 5—9—'54]

## தேனீ வளர்த்தல்: ஒரு லாபகரமான உபதொழில்.

மிகவும் தித்திப்பான தேனைப் பருகும் பொழுது, இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட புஷ்பங்களிலிருந்து தயாரிக்கப்பட்டதுதான் ஒரு டேபிள் ஸ்பூன் தேன் என்பதை நீங்கள் எப்பொழுதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? கூட்டிலிருந்து பல தடவைகளாக 50,000 மைல்களுக்கு மேல் பறந்து ஆயிரக்கணக்கான பூக்களிலிருந்துதான் தேனீ ஒரு ராத்தல் தேன் சேகரம் செய்கிறது. தேனீக்கூடு இயற்கையின் அற்புதமான ஒரு சிருஷ்டியாகும். தேன் தித்திக்கும் ஒரு விசேஷ உணவு. தேனீ வளர்த்தல் ஒரு நல்ல பொழுதுபோக்கும் அத்துடன் லாபகரமான ஒரு தொழிலும் ஆகும். இதைக் குறித்து விசேஷ விபரங்கள் அடுத்த இதழிலிருந்து விரிவான கட்டுரையாக வெளியிடுகிறோம் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

— **ஆசிரியர்**

(111ம் பக்கத் தொடர்ச்சி)
மாஜி ஜில்லாபோர்டு தலைவர் ஸ்ரீ ஸ்ரீனிவாச படையாச்சியும், அவரது சகோதரர்களும், திரு. விஜயராகவ படையாச்சி அவர்களும் ஸ்ரீ தேவ்ஜியை வரவேற்று உபசரித்தனர். ஸ்ரீ விஜயராகவ படையாச்சி அவர்கள் அன்பளிப்பாக சவுக்கு மகசூலு சுமார் ரூ. 10,000 பெறுமானமுள்ள 20 ஏ. புஞ்சை நிலம் தானமளித்தனுப்பியதும் இயக்கத்திற்கு சுழற்சி வேகத்தையே காட்டிற்று.

யாத்திரைக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் திண்டிவனம், திருக்கோவிலூர், கடலூர், சிதம்பரம் கிளை கதர் வஸ்திராலய நிர்வாகிகள் ஸ்ரீ திரு வேங்கடய்யா, ஸ்ரீ வி. கோபால்சாமி, ஸ்ரீ ஏ. வி. குப்புசாமி, ஸ்ரீ கே. எஸ். கோவிந்தசாமி ஆகியோர்களும், மற்ற ஸ்தல ஊழியர்களும் பெரு முயற்சியெடுத்துக்கொண்டு வெற்றிபெறச் செய்தார்கள். யாத்திரைக்கு உதவிய ஏனைய ஊழியர்களுக்கும், நிலதானமளித்து தத்தம் கிராமத்திற்கு வழிகாட்டிகளாயுள்ள நிலச்சுவான்தார்களுக்கும் எமது நன்றி.

மு. ராமகிருஷ்ண ரெட்டி,
தென்னாற்காடு ஜில்லா பூமிதான யக்ஞ கன்வீனர்

★ ★ ★

## பூமிதான யக்ஞ இயக்கத்தில் கிடைத்த பூமிதான பத்திரங்கள் பிரதேசவாரியாக அறிக்கை.

**1954 செப்டம்பர் 5-தேதி வரை.**

| | பிரதேசம் | கிடைத்த பூமி. | தானபத்திரம். | விநியோகித்த நிலம். | நிலம் கிடைத்த குடும்பம். |
|---|---|---|---|---|---|
| 1 | அசாம் | 1,692 | ... | ... | ... |
| 2 | ஆந்திரா | 18,976 | 552 | ... | ... |
| 3 | உத்தரப்பிரதேசம் | 5,16,387 | 14,706 | 59,693 | 19,039 |
| 4 | உத்கலம் | 1,00,909 | 34,502 | 708 | 214 |
| 5 | கர்நாடக் | 2,180 | 239 | 239 | ... |
| 6 | தமிழ்நாடு | 25,104 | 3,973 | 256 | 55 |
| 7 | கேரளம் | 17,000 | 1,200 | ... | ... |
| 8 | குஜராத் | 36,170 | 7,760 | 942 | 251 |
| 9 | டெல்லி | 9,245 | 249 | 41 | 20 |
| 10 | பஞ்சாப் | 9,520 | 2,041 | ... | ... |
| 11 | பீஹார் | 21,02,500 | 2,36,734 | 1,492 | 838 |
| 12 | வங்காளம் | 4,634 | 2,090 | 12 | 10 |
| 13 | மத்தியப்பிரதேசம் | 67,564 | 12,151 | 5,550 | |
| 14 | மத்தியபாரதம் | 62,412 | 5,377 | ... | ... |
| 15 | மகாராஷ்ட்ரா | 15,480 | 769 | ... | ... |
| 16 | மைசூர் | 3,414 | 1,395 | ... | ... |
| 17 | ராஜஸ்தான் | 3,22,310 | 2,134 | 5,761 | 1,351 |
| 18 | விந்தியப்பிரதேசம் | 5,305 | 1,003 | 244 | 104 |
| 19 | சௌராஷ்ட்ரா | 41,000 | 15,000 | ... | ... |
| 20 | ஹிமாலயப் பிரதேசம் | 1,900 | 66 | ... | ... |
| 21 | ஹைதராபாத் | 1,02,760 | 3,743 | 17,525 | 3,639 |
| | மொத்தம் | 34,66,462 | 3,45,321 | 92,463 | 25,521 |

## பூமிதான யக்ஞத்தில் கிடைத்த பூரா கிராமங்கள், மாகாணவாரியாக

| | | கிராமங்கள் |
|---|---|---|
| 1 | ஒரிஸ்ஸா | 43 |
| 2 | உத்தரப்பிரதேசம் | 1 |
| 3 | பீஹார் | 15 |
| 4 | ஹைதராபாத் | 2 |
| | மொத்தம் | 61 |

கிருஷ்ணராஜ்,
ஆபீஸ் காரியதரிசி,
அ. பா. ச. சேவா சங்கம், கயா.

## கதர் அத்தாட்சிப் பத்திர இலாகா மாற்றம்

பெரும்பாலும் வியாபார ரீதியில் நடைபெறும் கதர் வேலை தற்சமயம் அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில்கள் போர்டின் பொறுப்பாகிவிட்டது. ஆகையால் கதருக்கு அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் வேலைகளையும் கதர் போர்டாரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று காதி கிராமத்தில் சென்ற 4-9-'54ல் நடைபெற்ற அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டது. (தீர்மானம் 3) அதை அனுசரித்து அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் வேலைகளை கதர், கிராமக் கைத்தொழில் போர்டுக்கு மாற்றப்பட்டுவிட்டது.

அகில பாரத கதர், கிராமக் கைத்தொழில் போர்டு, கதர் வேலைக்கு அத்தாட்சிப் பத்திரம் வழங்கும்பொருட்டு ஒரு கமிட்டியை நிறுவியிருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் கீழ்க்கண்டவர்களாவார்கள்.

1) திரு. விசித்திரநாராயண் சர்மா — தலைவர்
2) „ துவாரகநாத் லேலே, பம்பாய்
3) „ நாராயண்ராவ் ஸோவனி, வர்தா
4) „ எம். எஸ். நாராயணராவ், திருச்செங்கோடு
5) „ பீம்ஸேன் வேதாலங்கார், ராஜஸ்தான்
6) „ புருஷோத்தம் கஞ்சி, பம்பாய்
7) „ சித்தராஜ டட்டா, ராஜஸ்தான்

— அ. வா. சகஸ்ரபுத்தே.

3-JAN 1956



## கதர் கூப்பன்கள்: சில அறிவிப்புகள்

**கதர் போர்டின் தோற்றம்.**

கதர் இயக்கத்தின் சரித்திரத்தில் மத்திய அரசாங்கம் காந்தியடிகளின் லட்சியத்தை ஓரளவுக்காகிலும் ஒப்புக்கொள்வதற்கு அறிகுறியாக தனது நேரடி மேற்பார்வையிலேயே கதர் வேலைகளை நடத்தும்பொருட்டு அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் போர்டை நிறுவியது ஒரு மகத்தான விஷயமாகும். நாடெங்கும் கதர்வேலையில் காணப்பட்ட சோர்வு நீங்கி சென்ற இரண்டு வருடத்திற்குள், உற்பத்தி பெருகி விற்பனையும் அதிகரித்து வந்துள்ளது. வேலையில்லாமல் திண்டாடும் கோடிக்கணக்கான மக்களுக்கு எவ்வகையிலாவது பயனுள்ள வழிகளில் நிவாரணமளிப்பதென்றால் கதர்வேலை மூலம்தான் சாத்தியமாகும் என்று நாளுக்குநாள் மக்களும் சர்க்காரும் உணரவும் தொடங்கிவிட்டார்கள்.

**வேலைகள் அதிகரிக்க மக்கள் ஆதரவு தேவை.**

பஞ்சம், வெள்ளம், வரட்சி முதலிய இயற்கை கோளாறுகளால் ஏற்படும் சங்கடமான நிலைமையிலிருந்து மக்களைக் காப்பாற்ற, பல இடங்களில் கதர்வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் அதிகரிக்கும் கதர் உற்பத்தியை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தாகவேண்டும். கதர் வேலைக்கு மக்கள் ஆதரவை பெருக்கவேண்டும். இந்த நோக்கத்துடன் அக்டோபர் இரண்டாம் தேதி காந்திஜயந்தி முதல் "கதர் கூப்பன்கள்" வெளியிடுவதென்று கதர் போர்டு தீர்மானித்திருக்கிறது.

**கதர் கூப்பன்கள்.**

மேற்படி கூப்பன்கள் கையினால் செய்த காகிதத்தில் ரூ. 2/- ரூ. 5/- ரூ. 10/- ரூ. 50/- ரூ. 100/- பெறுமானமுள்ளவைகளாக, மத்திய அரசாங்கத்தின் சார்பில் கரன்ஸிநோட்டுகள்போல் வெளியிடப்பட்டுள்ளது. அவைகளை எல்லா அத்தாட்சி பெற்ற கதர் வஸ்திராலயங்களிலும், கதர், கம்பளி, பட்டு, ஜரிகை, ரெடிமேடு, முதலியவைகளுக்காக மாற்றிக்கொள்ளலாம். ஆகையால் இந்த கூப்பன்கள் ரொக்கத்திற்கு சமானமாக பத்திரமாக வைத்துக்கொள்ளப்படவேண்டும்.

**சில முக்கியமான அறிவிப்புகள்.**

கைதவறிப்போன கூபன்களுக்கு பதில் கூப்பன்களோ, ரொக்கமோ வாபீஸ் செய்யப்படமாட்டாது. கூப்பன்கள் எல்லா சர்வ சேவா சங்க கிளைகளிலும், தபாலாபீஸ்களிலும் கிடைக்கும். கூப்பன் விற்பனை சம்பந்தமான முழு விபரங்களும் எல்லா கிளைகளுக்கும் ஏஜண்டுகளுக்கும் தபாலில் அனுப்பிவைக்கப்படுகிறது

**கூப்பன்களை கடனுக்காக விற்பனை செய்யக்கூடாது.**

ரொக்கம் பெற்றுக்கொண்டுதான் கூப்பன்களை விற்பனை செய்யவேண்டும்.

கூப்பன்களுக்காக கதர் 1955 மார்ச் 31தேதிக்குள் வாங்கிக்கொள்ளவேண்டும். அத்தாட்சி பெற்ற எல்லா கதர் வஸ்திராலயங்களிலும் தங்களிடம் கதருக்காக மாற்றப்படும் கூப்பன்கள் உண்மையானவைதானா என்பதை கவனித்து அவைகளை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

கூப்பன்கள் அவைகள் விற்பனை செய்யப்பட்டுள்ள மாகாணத்தில்தான் செல்லுபடியாகும்.

கூப்பன்களுக்கு பதில் எக்காரணத்தைக் கொண்டும் ரொக்கம் கொடுக்கக்கூடாது.

கூப்பன்களுக்கு கணக்கு வைப்பது, கதராக மாற்றின கூப்பன்களுக்கு ரொக்கம் பெற்றுக் கொள்வது முதலிய விபரங்கள் சுற்றறிக்கைமூலம் எல்லா கிளைகளுக்கும் அறிவிக்கப்படும்.

**தபால் ஆபீஸ்களிலும் விற்பனைக்கு கிடைக்கும்.**

தபால் ஆபீஸ்கள் மூலம் விற்பனை செய்யப்படும் கதர் கூப்பன்களின் பின்னால் தபால் முத்திரை இருக்கும். தபாலாபீஸ்மூலம் விற்பனையாகும் கூப்பன்களை அந்த தபாலாபீஸ் இருக்கும் மாகாணத்திலோ வெளி மாகாணத்திலேயோகூட மாற்றிக்கொள்ளலாம். ஆனால் அந்தக் கூப்பன் களுக்குபதில் ரொக்கம் கதர்போர்டின் காரியாலயத்திலிருந்துதான் பெற்றுக்கொள்ளலாம்.

கூப்பன்கள் சம்பந்தமான கணக்குகள் வாரம் ஒருமுறை மாகாண காரியாலயத்திற்கும் கதர் போர்டு காரியாலயத்திற்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

பம்பாய்,
27—8—54

—வி. ஜேராஜணி

## "சம்பத்து தானம்"

சர்க்கா சங்க ஊழியர்களில் கீழ்க்கண்டவர்கள் சம்பத்து தானம் கொடுத்திருக்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| திரு | வி. கோபாலசாமி, திருக்கோவிலூர் | ரூ. 5—0—0 | பிரதிமாதம் |
| " | வி. வி. சங்கரப்பன், புதுப்பட்டி | " 5—0—0 | " |
| " | பி. எஸ். குப்புசாமி, ராசிபாளையம் | " 2—0—0 | |

## "கிராமோதயம்"

சென்ற ஆகஸ்டு 15-உ முதல் நாளதுவரை காட்டுமுன்னார் கிளையிலிருந்து சுமார் 515 கிராமோதய சந்தாக்கள் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

— ஆசிரியர்

## "கிராமோதயம்"

[வாரவெளியீடு]

நேயர்களின் அன்புகனிந்த பேராதரவாலும், தமிழ்நாட்டு சர்வோதய ஊழியர்கள், பூமிதான கமிட்டியினர், சர்வ சேவா சங்க ஊழியர்கள், ஆகியோரின் விருப்பத்திற்கிணங்கவும் "கிராமோதயம்" தனது இரண்டாவது ஆண்டு பூர்த்தியடைந்ததும், மூன்றாமாண்டில் வாரவெளியீடாக வெளிவரும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— அ. பாலகிருஷ்ணன்

## இந்த இதழில்

86-வது சர்க்கா ஜயந்தி 105
தென்னாற்காடு ஜில்லாவில் தேவின் சுற்றுப்பிரயாணம் 106
தஞ்சை ஜில்லாவில் தேவின் பூமிதான யாத்திரை 107
பூமிதான யாத்திரை 108
பெரியகுளம் தாலூக்காவில் சங்கர்ராவ் தேவ்ஜியின் திட்டம் 108
சிறந்த கதர் ஊழியரின் நிறைந்த தானம் 108
திண்டுக்கல் ஜில்லாவில் சங்கர்ராவ் தேவின் யாத்திரை 108
கடம்பூரில் இரண்டாவது தமிழ்நாடு சர்வோதய சம்மேளனம் 110
சென்னை கவர்னரின் சர்க்கா ஜயந்தி செய்தி 111
தென்னாற்காடு ஜில்லா பூமிதான யாத்திரை 111
தொழில் நுணுக்கங்களும் வேலையில்லாத்திண்டாட்டமும் 112
விஞ்ஞான ரீதியில் அரிசி ஆராய்ச்சி 113
பூமிதான யக்ஞ இயக்கத்தில் கிடைத்த பூமிதானப் பத்திரங்கள் பிரதேசவாரியாக அறிக்கை 115
கதர் கூப்பன்கள்: சில அறிவிப்புகள் 116

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)